பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

21 10 2025 6.45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நான்கு நாள் பயணமாக இன்று கேரளா செல்கிறார்.
- பிஹார் மாநில சட்டப்பேரவைக்கு நடைபெறும் முதற்கட்டத் தேர்தலில் ஆயிரத்து 314 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.
- வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் சாலைகளில் மழைநீர் தேங்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அதிகாரிகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.
- வங்கக் கடலில் இன்று குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதால் தமிழகத்தில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இந்தியா மேலும் இரண்டு பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நான்கு நாள் பயணமாக இன்று கேரள மாநிலம் செல்கிறார்.

இன்று மாலை திருவனந்தபுரம் செல்லும் அவர், நாளை சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்ய இருப்பதாக குடியரசுத்தலைவர் மாளிகை வெளியிட்ட தகவல் தெரிவிக்கிறது.

தொடர்ந்து நாளை மறுநாள் திருவனந்தபுரம் ஆளுநர் மாளிகையில் முன்னாள் குடியரசுத்தலைவர் கே.ஆர். நாராயணனின் சிலையை திருமதி திரௌபதி முர்மு திறந்து வைக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தீபாவளிப் பண்டிகையை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை அவரது மாளிகையில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் சந்தித்து வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

குடியரசுத்தலைவர் மாளிகை வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தாவும், திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டார்.

இந்நிலையில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து தீபாவளி வாழ்த்துகளைப் பரிமாறிக்கொண்டார்.

<<<<>>>>

பிஹார் மாநிலத்தில் முதற்கட்ட சட்டப்பேரவைத் தேர்தலில் வேட்புமனுக்களை திரும்பப் பெற காலக்கெடு முடிவடைந்த நிலையில் 121 தொகுதிகளில் ஆயிரத்து 314 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

நேற்று வரை முதற்கட்ட தேர்தலில் மனுதாக்கல் செய்தவர்களில் 61 பேர் தங்களின் மனுக்களை திரும்பப் பெற்றுள்ளனர்.

இம்மாநிலத்தில் அடுத்த மாதம் 6 மற்றும் 11ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதனிடையே இரண்டாம் கட்டமாக அடுத்த மாதம் 11ஆம் தேதி 122 தொகுதிகளில் நடைபெற உள்ள தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்றுடன் நிறைவடைந்தது.

மனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறும். மனுக்களைத் திரும்பப் பெற நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

இரண்டு கட்டங்களிலும் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 14ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகும்.

<<<<>>>>

வடகிழக்குப் பருவமழை மாநிலம் முழுவதும் தீவிரமடைந்துள்ள நிலையில், சென்னை துரைப்பாக்கத்தில் வெள்ளநீர் வடிகால் பணிகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் நேற்று ஆய்வு செய்தார்.

அவருடன் மாநகராட்சி அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

முக்கிய சாலைகள் மற்றும் தெருக்களில் மழைநீர் தேங்காதவண்ணம் உடனுக்குடன் வெளியேற்றுவதை அதிகாரிகளும் ஊழியர்களும் உறுதி செய்ய வேண்டும் என்று அப்போது திரு. உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

அடுத்த தலைமுறைக்கான GST சீர்திருத்தத்தால் மின்னணுப் பொருட்கள் மற்றும் விவசாயத்திற்குப் பயன்படும் டிராக்டர்கள் உள்ளிட்ட உபகரணங்களின் விலை குறைந்துள்ளது.

தருமபுரியில் டிராக்டர் நிறுவனத்தில் GST வரி குறைப்புக்குப் பின்னர் அதிக அளவில் விற்பனை நடைபெறுவதாக அந்த நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

வங்கக் கடலின் தென்கிழக்குப் பகுதியில் அந்தமான் அருகே இன்று குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 48 மணி நேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அடுத்த 3 நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை வரை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மைய அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், டெல்டா மாவட்டங்கள் உட்பட மாநிலத்தின் 23 மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அவ்வப்போது விட்டு விட்டு மிதமான மழை பெய்து வருகிறது.

**<<<<>>>>**

இதனிடையே காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக ஒகேனக்கல் காவிரியாற்றுக்கு வரும் தண்ணீரின் அளவு 24 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

பிலிகுண்டுலுவுக்கு வரும் தண்ணீரின் அளவை மத்திய நீர்வள ஆணைய அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

ஜப்பான் நாட்டின் முதலாவது பெண் பிரதமராக லிபரெல் ஜனநாயக கட்சியின் தலைவர் Sanay Takaichi பதவியேற்க உள்ளார்.

**<<<<>>>>**

இஸ்ரேல் படையினர் வான்வழித் தாக்குதலை நீடித்து வருவதால் பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்புடனான அந்நாட்டின் சண்டை நிறுத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<>>>

பாகிஸ்தானில் எரிவாயு நிறுவன பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த துணை ராணுவப் படையினர் மீது தாலிபன் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 வீரர்கள் கொல்லப்பட்டனர்.

<<<>>>

தீபாவளிப் பண்டிகையை ஒட்டி ஆஸ்திரேலியா, நியூசிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களும், தூதர்களும் மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

<<<>>>

தலைநகர் புதுதில்லியில் நாரெலா தொழிற்பேட்டையில் உள்ள காலணி தொழிற்சாலையில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. எனினும் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை என்று தீயணைப்புத்துறையினர் தெரிவித்தனர்.

<<<>>>

இதேபோல் ஹரியானா மாநிலம் அம்பாலாவில் பழைய பொருட்கள் வைக்கப்பட்டுள்ள கிடங்கிலும் தீ விபத்து ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<>>>

இந்தியாவில் கடந்த ஆண்டில் 22 ஆயிரத்து 446 யானைகள் உள்ளதாகவும், இது 4 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த எண்ணிக்கையை விட 4 ஆயிரம் குறைவு என்றும் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

**<<<>>>>**

ஹிந்தி திரையுலகின் பழம்பெரும் நடிகர் அஸ்ரானி மும்பையில் நேற்று உடல்நலக் குறைவால் காலமானார். அவருக்கு வயது 84.

**<<<>>>>**

தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தில் ஒரே நாளில் உலகின் மிக நீளமான 101 காற்றாலை இறகுகள் கப்பலில் ஏற்றுமதி செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டது.

**<<<>>>>**

தீபாவளிப் பண்டிகையை ஒட்டி அதிக அளவில் பட்டாசுகள் வெடிக்கப்பட்டதால் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் அடர்ந்த புகைமூட்டம் நிலவியது. காற்றின் தரக் குறியீடு பல இடங்களில் 500க்கும் அதிகமாக பதிவானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**<<<>>>>**

***விளையாட்டுச் செய்திகள்***

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இந்தியா மேலும் இரண்டு பதக்கங்களை வென்றுள்ளது.

பஹ்ரைனின் மனாமா நகரில் நடைபெறும் மல்யுத்தப் போட்டியின் மகளிர் 52 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் கனிஷ்கா பிதூரி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

உஸ்பெகிஸ்தானின் Mubinabonu Karimova தங்கப் பதக்கம் வென்றார்.

ஆடவர் 83 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் அரவிந்த் வெண்கலப் பதக்கம் வென்றார்.

இவர், உஸ்பெகிஸ்தானின் Shohjahon Golibov-யிடம் அரையிறுதிப் போட்டியில் தோல்வியடைந்தார்.

இதன்மூலம் இந்தியா இந்தப் போட்டியில் மொத்தம் மூன்று பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<>>>>

ஃபிரெஞ்ச் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்ஷயா சென் மற்றும் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை இந்தப் போட்டியில் விளையாட உள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Anmol Kharg, Anupama Upadhyaya, Unaati Hooda உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.

மகளிர் இரட்டையர் பிரிவைப் பொறுத்தவரை கவிப்பிரியா செல்வம் - சிம்ரன் சிங் மற்றும் Ruthuparna - Swethaparna இணை பங்கேற்க உள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் துருவ் கபிலா - தனீஷா கிரஸ்டோ, ரோஹன் கபூர் - ருத்விகா ஷிவானி ஆகியோர் தங்களின் திறமைகளை வெளிப்படுத்த உள்ளனர்.